**பயனுள்ள விளக்கங்கள்**

## விபத்து உதவிப்படிகள்

விபத்தினால் உங்களுக்குக் கிடைக்கும் உதவிப்படிகளின் தொகை விபத்து நடந்த தேதியையும், அநேகமாக உதவிப்படிகளைக் கோரப் பயன்படுத்தும் காப்புறுதி ஒப்பந்தத் தேதி புதிப்பித்தலையும் சார்ந்திருக்கிறது. நீங்கள் தகுதி பெறக்கூடிய சலுகைகள் பற்றிய கூடுதல் விபரங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள ஒன்டாரியோவின் Financial Services Commission (நிதி சேவைகள் ஆணையம்) தயாரித்த அட்டவணை ஒன்றைக் காணவும்: *http://www.fsco.gov.on.ca/english/insurance/auto/ reform/MoreChoice.pdf.*

## வலி மற்றும் வேதனை அல்லது பொதுவான சேதங்கள்

வலி மற்றும் வேதனைக்காக வழக்கு தொடுக்க வேண்டும் என்றால் (சில சமயங்களில் இது "பொதுவான சேதங்கள்" எனவும் குறிப்பிடப்படும்), நீங்கள் "வாய்மொழித் தொடக்க நிலையை" கடந்ததை நிரூபித்தல் அவசியமாகும். அதாவது உங்களுக்கு நிரந்தரமாக மோசமான உருவ மாற்றமோ (உருக்குலைவு) அல்லது கோளாறோ முக்கியமான உடல், மனம் அல்லது உளவியல் சார்ந்த செயல்பாடுகளில் ஏற்பட்டிருக்க வேண்டும். பொதுவாகச் சொல்வதானால், காலவரையில்லாமல் நீங்கள் உங்கள் முறையான பணி அல்லது வழக்கமான தினசரி அலுவல்களுக்கு திரும்ப முடியாது என்பதே இதன் பொருளாகும். இந்தச் சோதனையை நீங்கள் நிறைவு செய்தாலும் கூட, வலி மற்றும் வேதனைக்கான கோரல்களில் சட்டப்படி $30,000 டாலர்கள் கழிக்கப்பட வேண்டும். சட்டப்படி கழிக்கப்பட வேண்டிய இந்தத் தொகை, பேச்சு வார்த்தை அல்லது நீதிமன்றத் தீர்ப்பு மூலம் அளிக்கப்படும் தொகையைக் கணிசமாகக் குறைத்து விடும். உதாரணத்திற்கு, பேச்சுவார்த்தை அல்லது வழக்கின் மூலம் உங்கள் பொது

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

இழப்புகள் $70,000 டாலர்களுக்கு மதிப்பிடப்பட்டால், திரும்பப் பெறப்படும் தொகை (வழக்குச் செலவுகள் உட்படாதது) $40,000 டாலர்கள் ஆகும் ($70,000 டாலர்களில் சட்டக்கழிவு $30,000 டாலர்கள் போக மீதித்தொகை). ஆயினும், வலி மற்றும் வேதனைக்கான கோரல் தொகை $100,000 டாலர்களுக்கும் அதிகமாக மதிப்பிடப்பட்டால், சட்டக்கழிவு பொருந்தாது.

காப்புறுதிச் சட்டத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ள வார்த்தைகளை மீளாய்வு செய்வதற்கு, *http://www.e-laws.gov.on.ca/ html/statutes/english/elaws _statutes_90i08_e.htm* என்ற இணையத் தளத்திற்குச் சென்று பிரிவு 267.5(7) ஐக் காணவும்.

இங்கு கூறப்பட்டுள்ள வார்த்தைகள் ஒழுங்குமுறை 461/96ன் பிரிவு 4.2லும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. வார்த்தைகளை மீளாய்வு செய்வதற்கு *http://www.e-laws.gov.on.ca/html/regs/ english/elaws_regs_960461_e.htm* ***ஐக் காணவும்***.

## பொருளாதார இழப்பு

பெற்ற விபத்து உதவிப்படிகளைத் தவிர, நீங்கள் பொருளாதார இழப்புத் தொகையைக் கோர உங்களுக்குத் தகுதி உண்டு என்றாலும், உங்களுடைய விபத்து செப்டம்பர் 1, 2010 க்கு முன் ஏற்பட்டிருந்தால் வழக்கு விசாரணைக்கு முன்னர் நீங்கள் நிகர பொருளாதார இழப்பில் 80 சதவிகிதத் தொகை பெறுவதற்கு வரம்பிடப்பட்டுள்ளது, அல்லது உங்கள் விபத்து அந்த தேதி அல்லது அதன் பின் ஏற்பட்டிருந்தால், அது மொத்த இழப்பில் 70 சதவிகிதத் தொகை பெறுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைக்குப்பின் ஏற்படும் பொருளாதார இழப்புகள் முழுவதையும் திரும்பப் பெறலாம். உங்களுடைய கூடுதல் பொருளாதார இழப்புக்கான தொகையைக் கோர நீங்கள் நிரந்தர மோசமான காயங்களை நிரூபிக்க வேண்டியத் தேவையில்லை.

காப்புறுதிச் சட்டத்தில் பிரயோகிக்கப்பட்டுள்ள வார்த்தைகளை மீளாய்வு செய்வதற்கு, *http://www.e-laws.gov.on.ca/ html/statutes/english/elaws _statutes_90i08_e.htm* என்ற இணையத் தளத்திற்குச் சென்று பிரிவு 267.5(1) ஐக் காணவும்.

பயனுள்ள விளக்கங்கள்